DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 131/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்னுசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | நாச்சிமுத்து | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2025..

**முதல் விசாரணை**

1. நான் உடுமலையில் UKP நகரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஒரே மகள் வினோதினி, வீட்டில் இருந்து மென்பொருள் வேலை செய்து வந்தோம். கடந்த 08.03.2025 ம் தேதியன்று முக்கோணத்தில் உள்ள எங்கள் உறவினர் திருமண வீட்டிற்கு மதியம் 12.00 மணிக்கு நானும் என் மனைவியும் சென்றோம். எனது மகள் வினோதினி அன்று மாலை 6.10 மணிக்கு வீட்டையும் கேட்டையும் பூட்டி விட்டுசாவியை எடுத்து முக்கோணத்திற்கு வந்தார்.

2. திருமணம் முடிந்து இரவு 9.20 மணிக்கு நான் எனது மனைவி என் மகள் டிரைவருடன் வீட்டிற்கு வந்தோம். முன்பக்க டோரில் சாவியை செலுத்தி திறந்த போது கதவை திறக்க முடியவில்லை என்ன என்று பின்பக்க மாக கிழக்கு பார்த்த கதவை திறந்த போது கதவு உடைக்கப்பட்டிருந்தது. அப்போது தான் முன் பக்க டோரில் மேல் தாப்பாழ் உள் பக்கமாக போட்டிருந்தது. நாங்கள் உள்ளே சென்று மகளின் ரூமை பார்த்த போது தங்க வளையல் –2 செட் , தனியாக ஒரு வளையல், பேரனின் கை காப்பு– 1 , தோடு 3 செட், மொத்தம் 8 ¾ பவுன்

திருடுபோயிருந்தது.

3. பின்னர் என் ரூமில் பார்த்த போது என் மனைவியின் சேலைகளை கலைத்து கட்டிலில் போடப்பட்டிருந்தது. பீரோவில் நான் வைத்திருந்த 50000/– பணம் மற்றும் சில்லரையாக வைத்திருந்த பணம் மொத்தம ரூ 55000/– திருடுபோயிருந்தது. என் பீரோவில் இருந்த வெள்ளி தட்டு வெள்ளி டம்ளர் திருடுபோயிருந்தது. பின்னர் உறவினர்கள் எல்லாம் வந்தார்கள். 10 ம் தேதி காவல் நிலையம் சென்றுபுகார் கொடுத்தோம்.

4. உறவினர்களிடம் விசாரித்த விடடுபுகார் கொடுக்கலாம் என்று நினைத்து விட்டு 2 நாள் கழித்து புகார் கொடுத்தேன். தங்க நகையின் மதிப்பு 75000/– வெள்ளி நகையின மதிப்பு 45000/– பணம் 55000/– என புகார்கொடுத்தேன். நான் புகார் கொடுத்த போது 7 ¾ பவுன் என கொடுத்திருந்தேன் பின்னர் என் மனைவி ம ற்றும் மகளும் அதன் மதிப்பு அதிகம் என்று கூறினார்கள். உடனடியாக காவல் நிலையம் சென்று போலிசாரிடம் 8 ¾ பவுன் என்று சொன்னேன்.

5. என்னிடம் காட்டப்படும்புகார் நான் எழுதியது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் புகாரை பெற்று கொண்டு விசாரணை செய்வதகாவும் கூடிய விரைவில் குற்றவாளியை கண்டுபிடிப்பதாகவும் உறுதி கூறினார்கள். ஒரு மாதம் கழித்து போலிசார் என்னை அழைத்தார்கள். குற்றவாளியை கண்டுபிடித்து விட்டதகாவும் நகைகளை மீட்டுவிட்டதாகவும் கூறினார்கள். நான் காவல் நிலையம் சென்றபோது குற்றவாளியை விசாரணை முடித்து அழைத்து சென்றதாகவும் சொன்னார்கள். போலிசார் அலுவலகத்தில் வந்து பார்த்து விட்டு வந்து நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து நகைகளை பெற்று கொண்டோம். பணம், வெள்ளி பொருள்கள் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். நீதிமன்றத்தின் மூலம் பெற்ற நகைகளை இன்றைய தினம் கொண்டு வந்துள்ளேன். **தங்கவளையல்–1 செட் அசா.பொ.1 என்றும் , தனியாக ஒரு வளையல் அசா.பொ.2 என்றும், குழந்தையின் தங்க காப்பு –1 அசா.பொ.3 என்றும், தோடு –1 செட் அசா.பொ.4 என்றும், தங்கதோடு –2 செட் அசா.பொ.5 என்றும் குறியீடு செய்யப்படுகிறது.** நகைகள் குறியீடு செய்யப்பட்ட பிறகு மீண்டும் சாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதியில் உங்கள் மகள் மாலை 6.10 மணி வரை வீட்டில் இருந்தார் என்றால் ஆமாம் Work from Home செய்தார். 9.20 திருமணம் முடித்து வீட்டிற்கு வந்திர்கள் என்றால் ஆமாம். இடைப்பட்ட நேரம் 3 மணி நேரம் என்றால் ஆமாம். திருமணத்திற்கு போன விவரம் அக்கம் பக்கத்தினருக்கு தெரியும் என்றால் இல்லை.

திருமணத்திற்கு போவது யாருக்கு தெரியாது என்றாலும் உறவினர்களுக்கு தெரியாதா என்றாலும் மண்டபத்தில் இருந்தவர்களுக்கு தெரியும். உங்கள் வீட்டின் அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு சென்ற வவிவரம் தெரிந்து நபரால் தான் இந்த சம்பவம் செய்ய இயலும் என்றால் அது பற்றி தெரியாது. நவீன இயந்திரம் மூலம் கட் செய்து திருடியிருக்கலாம் என்றால் ஆமாம். அச்சு மாதிரி லாக்கில் மட்டும் வைத்து திறந்து பொருளை எடுத்துள்ளார். நவீன இயந்திரம் மூலம் ஒரு ஆளாக திருட முடியாது என்றால் அதுபற்றி தெரியாது. 2 நாள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். உங்களுடைய புகாரில் கொடுக்கப்பபட்ட நகைகள் முழுவதுமாக கிடைக்கவில்லை என்றால் பணம் மற்றும் வெள்ளி நகை கிடைக்கவில்லை. இந்தபொருட்களுக்கான பில்கள தாக்கல் செய்யவில்லை என்றால் முன் எடுத்த பொருள். நகை எடுத்து எத்தனை வருடம்ஆகிறது என்றால 2 வருடம். அபபடி இருந்தால் பில் இருக்கும் என்றாலும் வழக்கு சொத்துக்கள் பில்கள் இல்லாதததால் அது உங்கள்சொத்து இல்லைஎன்றால் சரியல்ல. சாட்சி பட்டியலில் உள்ள வினோதினிஉங்கள் மகள் என்றாலும் பாபுராஜ் மணிகண்டன், முருகேசன் தெரியுமம் என்றாலும் பக்கத்து வீட்டுக்காரர்கள். கார்த்திக் முகமது சபிர் தெரியும் என்றால் தெரியாது. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.